**செ. கு. எண்: 023** **நாள்: 08.02.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**

அவர்களின் அறிக்கை – 8.2.2018

**தருமபுரி மாவட்டம்,** அரூர் வட்டம், வள்ளிமதுரை கிராமம், **வரட்டாறு நீர்த்தேக்கத்திலிருந்து** பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, தருமபுரி மாவட்டம், **வரட்டாறு நீர்த்தேக்கத்திலிருந்து** பாசனத்திற்காக **10.2.2018** முதல் 30 நாட்களுக்கு, 77.760 மி.கன அடி தண்ணீரைத் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்திலுள்ள **5,108 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**